



# மாணவர்களின் பின்புலம்

மாணவர்களுள் பலருக்குத் தமிழ் எழுத்துகளில் அறிமுகமிருப்பினும் அவற்றை ஒலிக்கும்போது சிரமத்தை எதிர்நோக்கினர். அவர்களுக்கு 'லகர, ளகர, ழகர, நகர, னகர, ணகர, ரகர, றகர' ஒலிப்புமுறையில் நாக்கைச் சரியாகப் பொருத்தும் இடமறிந்து உச்சரிப்பதில் குழப்பம் இருக்கிறது. மாணவர்கள் எல்லா எழுத்துகளுக்கும் ஒரே ஒலிப்புமுறையையே பயன்படுத்தினர். அவர்கள் எழுதும்போது அது வரிவடிவத்திலும் பிரதிபலித்தது. அவர்களுக்குக் குழப்பத்தை அளித்த 'லகர, ளகர, ழகர, நகர, னகர, ணகர, ரகர, றகர' ஒலிப்புமுறையில் பயிற்சி தேவை என்பது கண்டறியப்பட்டது.










# மாணவர்களின் கற்றல் தேவை

மாணவர்களின் ஒலிப்புமுறையில் ஏற்படும் சிக்கலை ('லகர, ளகர, ழகர, நகர, னகர, ணகர, ரகர, றகர') தீர்க்கும் நோக்கத்துடன் தமிழ் எழுத்துகளின் ஒலிகளைத் தெளிவாகவும் பிழையறவும் உச்சரிக்க உதவும் வகையில் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்னும் பாடம் உருவாக்கப்பட்டது.



# ஜான் ஹாட்டியின் கோட்பாடு

மாணவர்களின் ஒலிப்புமுறையை மேம்படுத்த ஜான் ஹாட்டியின் (John Hattie) வெளிப்படையான கற்றல் (Visible Learning) என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்னும் பாடம் வடிவமைக்கப்பட்டது. அது மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் தெளிவான இலக்குகளுடன் அமைந்துள்ளது. என்ன கற்க வேண்டும், எப்படிக் கற்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமையுடன் மாணவர்கள் தங்கள் கற்றலை வெற்றிக்குரிய அளவைகளைக் கொண்டு சுய மதிப்பீடு செய்தனர். மாணவர்கள் தாங்களே தங்கள் மதிப்பீட்டு இலக்குகளை நிர்ணயிக்கும் விதமாகவும் கற்றலில் தங்களது முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் விதமாகவும் இப்பாடம் அமைந்துள்ளது.

## பாட நோக்கங்கள்



உயர்நிலை ஒன்று மாணவர்களை மையமாகக் கொண்டு அமைந்த இப்பாடத்தில் மாணவர்கள் தமிழ் எழுத்துகளின் ஒலிவடிவத்தையும் வரிவடிவத்தையும் புரிந்துகொள்ளும் திறனைக் கைவரப்பெறுவர். மாணவர்கள் தமிழ் எழுத்துகளின் ஒலிகளைத் தெளிவாகவும் பிழையறவும் உச்சரிக்க அறிந்துகொள்வர். அதோடு, கருத்துக் குழப்பமில்லாமல் தமிழில் பேசும் திறனையும் எழுதும் திறனையும் கைவரப்பெறுவர்.







## வெளிப்படையான கற்றல்

**நான் செய்கிறேன் – (I Do)** ‘லகர, ளகர, ழகர, நகர, னகர, ணகர, ரகர, றகர’ ஒலிப்புமுறையில் நாக்கைச் சரியாகப் பொருத்தும் இடமறிந்து உச்சரிக்கும் முறையை ஆசிரியர் முன்மாதிரியாக இருந்து செய்து காட்டினார்.

**நாம் செய்வோம் – (We Do)** ஆசிரியர் வழிநடத்த மாணவர்கள் ஒலிப்புமுறையைக் கற்றனர். வினாடி-வினாக்கள், வாசிப்பின் வாயிலாக மாணவர்களின் புரிந்துணர்வை உணர்ந்து சரிபார்க்க ஆசிரியரால் முடிந்தது.

**நீ செய்யவும் – (You Do)** மாணவர்கள் தனிநிலையில் ‘லகர, ளகர, ழகர, நகர, னகர, ணகர, ரகர, றகர’ ஒலிப்புமுறையில் நாக்கைச் சரியாகப் பொருத்தும் இடமறிந்து உச்சரித்துப் பழகினர்.







# கற்றல் நடவடிக்கைகள்










### ஒலி-வடிவம்-பொருள்

மாணவர்கள் ஒரு சொல்லிலுள்ள தமிழ் எழுத்துகளின் ஒலிகளை அடையாளங்கண்டு, அவற்றிற்குரிய எழுத்து வடிவங்களோடு பொருத்தி, சொல்லின் பொருளை உணர்ந்து கற்கும்போது கற்றல் செயல்முறை முழுமையடைகிறது. இச்செயற்பாட்டில் தெளிவான இலக்கு, முறையான வழிகாட்டுதலுடன் கூடிய பயிற்சி, கருத்துத்தெரிவிப்பு ஆகியவை கற்றலை மேம்படுத்துகின்றன. கல்விசார் நரம்பியல் அடிப்படையில் கேட்டல், பார்த்தல், பொருளுணர்தல் ஆகிய திறன்களின் ஒருங்கிணைப்பு மாணவர்களிடத்தில் வலுவான நரம்பியல் பிணைப்பை உருவாக்குகிறது. இது மாணவர்களின் நினைவாற்றலை அதிகரிப்பதோடு, கற்ற தகவல்களைத் தேவையான நேரத்தில் மீண்டும் மீட்டெடுக்கும் திறனையும் உறுதிப்படுத்துகிறது.





### சொல்லுதலும் எழுதுதலும்

செயல்முறை விளக்கம், சுயகற்றல், மின்னிலக்கக் கற்றல் தளங்கள் வழங்கும் கருத்துத்தெரிவிப்பால் மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுகிறது. இவை மாணவர்கள் தங்கள் கற்றல் செயல்திறனைத் தாங்களே கண்காணித்து மேம்படுத்திக்கொள்ள உதவுகின்றன. குறிப்பாக, ஓர் எழுத்தைப் பார்த்து, அதன் ஒலியை உச்சரித்து, அதே வேளையில் அதனை எழுதும்போது கல்விசார் நரம்பியல் செயற்பாடுகள் தூண்டப்படுகின்றன. இச்செயற்பாடு மாணவர்களின் செவிவழி, காட்சிவழி, பேச்சுவழி, இயக்கவழி ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மூலம் கற்றலை ஆழமாக வலுப்படுத்துகிறது.

### காலத்திற்கும் தமிழ் – கதை, இசை, நாடகம்

மாணவர்கள் செயல்வழிக் கற்றலில் ஈடுபடும்போது, தகவல் பரிமாற்றம், ஆழமான சிந்தனை வாயிலாக அவர்களின் அறிவாற்றல்சார் கற்றல் (Cognitive Learning) மேம்படுகிறது. குறிப்பாக, கதைசொல்லல், இசை, நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தல் வாயிலாக மாணவர்கள் தமிழ்மொழியையும் அதன் பண்பாட்டையும் ஆழமாகப் புரிந்துகொள்கின்றனர். இவ்வாறு மாணவர்கள் உணர்வுபூர்வமாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும்போது, அது அவர்களுக்கு அர்த்தமுள்ள அனுபவத்தையும் உற்றுக் கவனித்தலையும் பண்பாட்டுப் பிணைப்பையும் வழங்குகிறது. இத்தகைய உணர்வுபூர்வமான கற்றல் மாணவர்களின் நீண்டகால நினைவாற்றலை (Long-term Memory) வலுப்படுத்துகிறது என்பதைக் கல்விசார் நரம்பியல் உறுதிப்படுத்துகிறது.











## வகுப்பறை கற்றல்

| ஒரு சொல்லில் 'ரகர, றகர' ஆகிய எழுத்துகள் வருமிடம் | |
|---|---|
| 'ரகரம்' – 'ரகர' வரிசை எழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இறுதியில் வரும். | 'றகரம்' – 'றகர' வரிசை எழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வருவதில்லை. |
| **ஒரு சொல்லில் 'ணகர, நகர, னகர' ஆகிய எழுத்துகள் வருமிடம்** | |
| 'ணகரம்', 'னகரம்' – 'ணகர', 'னகர' வரிசை எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. இடையிலும் இறுதியிலும்தான் வரும். | 'நகரம்' – 'நகர' வரிசை எழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் வரும். |
| **ஒரு சொல்லில் 'லகர, ளகர, ழகர' ஆகிய எழுத்துகள் வருமிடம்** | |
| 'லகரம், ளகரம், ழகரம்' – இந்த வரிசை எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. இடையிலும் இறுதியிலும் வரும். | |

ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையைப் பயன்படுத்தி, 'தமிழும் நானும்' என்னும் பாடத்தின் வாயிலாக மாணவர்களுக்குத் தமிழ் எழுத்துகளின் ஒலிப்புமுறைகள் கற்பிக்கப்பட்டன. இக்கற்றல் முறையினால், மாணவர்கள் தங்கள் வகுப்பறையில் கற்ற ஒலிப்புமுறையைப் புற உலகோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் திறன் பெற்றனர். தமிழ் எழுத்துகளின் ஒலிப்புமுறைப் பயிற்சி வெறும் பாடமாக அமையாமல், மாணவர்களின் அன்றாட வாழ்வோடும் நடைமுறைத் தேவைகளோடும் தொடர்புடையதாக அமைந்தது. இது அவர்கள் மொழியைத் தடையின்றிப் பயன்படுத்தவும் அதன் மூலம் பயன் பெறவும் வழிவகை செய்தது.

இப்பாடம் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை வெகுவாகத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டது. செய்தி வாசிப்பாளர், விளம்பரம் செய்பவர், விளையாட்டு வர்ணனையாளர் முதலிய பல்வேறு பாத்திரங்களை மாணவர்கள் ஏற்று, வகுப்பறையில் தங்கள் மொழித்திறன்களை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்தினர். இப்பாடங்கள் மாணவர்களின் கற்கும் நிலைக்கு ஏற்பவும் அவர்கள் எளிதில் உள்வாங்கிக்கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டன. மேலும், நெகிழ்வுத்தன்மை கொண்ட பாடத்திட்டமும் ஆர்வமூட்டும் பயிற்றுமுறைகளும் மாணவர்களின் கற்றல் அனுபவத்தை முழுமையாக்கின.





# மாணவர்களின் கற்றல் விளைவுகள்







மாணவர்கள் தமிழ் எழுத்துகளை ஒலிக்கும் விதத்தை அறிந்துகொண்டனர். எழுத்துகளிடையே உள்ள ஒலி வேறுபாட்டையும் அவ்வெழுத்துகளால் அமையும் சொல்லின் பொருள் வேறுபாட்டையும் அறிந்துகொண்டு எழுத்துப் பிழைகளை எளிதில் அகற்றிக்கொண்டனர்.







கற்றுக்கொண்ட ஒலிப்புமுறையையும் வரிவடிவத்தையும் சரியாக அடையாளங்கண்டு கவிதைகள், பாடல்கள், நாபிறழ்பயிற்சிகள், மின்சிறுகதைகள், வாசிப்புக் களஞ்சிய கதைகள் முதலியவற்றின் வாயிலாகவும் நாடகத்தில் பாத்திரமேற்று நடித்தல், நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருத்தல் முதலியவற்றின் வாயிலாகவும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

மாணவர்கள் தமிழ் எழுத்துகளை ஒலிக்கும் முறையில் தங்களது தற்போதைய நிலையறிந்து, அடைய வேண்டிய நிலைக்கு எவ்வாறு முன்னேறுவது என்பதை அறிந்துகொண்டனர். இதன் விளைவாக, ஒலித்தல், படித்தல், பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்கள் மேம்பட்டதோடு 21-ஆம் நூற்றாண்டுத் திறனான கருத்துப்பரிமாற்றத் திறன்களும் மேம்பட்டன.






# தேசிய நூலகக் கற்றல் பயணம்







# எதிர்காலத் திட்டங்கள்

## வலையொலிகள்

**வலையொலி உருவாக்குதல்**
மாணவர்கள் தாங்கள் கற்ற தமிழ் எழுத்துகளின் ஒலிகளைப் பயன்படுத்தி வலையொலி ஒன்றை உருவாக்குவர்.

## ஊடகத் தமிழ்

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், சிங்கப்பூர்த் தமிழர் கலைக்களஞ்சியம் ஆகிய சமூக ஊடகங்களில் இடம்பெற்றிருக்கும் தலைப்புகளுள் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அத்தலைப்பையொட்டிய நாளேட்டுச் செய்தியை உருவாக்குவர்.

## ஒலிப்புமுறைத் தூதுவர்கள்

தமிழ் எழுத்துகளின் ஒலிப்புமுறையில் சிறந்து விளங்கும் மாணவர்களை 'ஒலிப்புமுறைத் தூதுவர்களாக' (Pronunciation Ambassadors) நியமித்து, அவர்களைக் கொண்டு மற்ற மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.